விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 28 ஷவ்வால் 12 இதழ் 148

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12-7-84

# 15 வெடிமருந்துப் பெட்டிகள்

## சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்

[சென்னை]

இலங்கைக்கு கடத்தப்பட விருந்த 15 வெடி மருந்துப் பெட்டிகளை தமிழ்நாடு சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தமிழகத்திலிருந்து படகு ஒன்றில் கடத்தப்படவிருந்த இந்த வெடிமருந்தை சுங்க அதிகாரிகள்கைப்பற்றியபோது படகிலிருந்த இருவர் தப்பி ஓடிவிட்டனர்.

இந்த வெடிமருந்துகள் தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டது.

# சர்வகட்சி மாநாடு:

## திகதி குறிப்பிடப்படவில்லை

[இ. கந்தசாமி]

நேற்றுக்கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் சர்வகட்சி மாநாடு பற்றி ஆராயப்பட்ட போதும் மாநாடு நடைபெறுவதற்கான திகதிஎதுவும் குறிப்பிடப்படவில்லை.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டம்நீண்டநேரமா நடை

(8ம் பக்கம் பார்க்க)

# மல்லாகம் நீதிமன்றத்தில் துணிகரக் கொள்ளை!

## அறைகள் உடைக்கப்பட்டு முக்கிய தஸ்தாவேஜுகள் அபேஸ்!!

(ஏ. வி. மாணிக்கம்)

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் துப்பாக்கி முனையில் துணிகரக் கொள்ளை நடந்துள்ளது. நீதிமன்றக் காரியாலயத்தில் சகல அறைகளும் உடைக்கப்பட்டு இக்கொள்ளை நடந்துள்ளது.**

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட இக்கொள்ளையில் பெறுமதியான நகைகள் ரொக்கப்பணம் ஆகியன வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சகல அறைகளும் உடைக்கப்பட்டதுடன், முக்கிய தஜ்தாவேஜுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மரப்பெட்டகம் ஒன்றும் உடைக்கப்பட்டே இந்த தஜ்தாவேஜுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இரும்புப்பெட்டியும், மரப்பெட்டகமும் பாதுகாப்பான அறையொன்றுள் (றெக்கோட் றூம்) வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

இருதமிழ் தட்டச்சு இயந்திரம், இருஅவுட்போட் மோட்டார் இயந்திரம் ஆகியனவும் கொள்ளை அடிக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று வானொன்றில் வந்ததாகவும், நீதிமன்ற காவலாளிகளை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி முகம்குப்புற நிலத்தில் படுக்க வைத்துவிட்டு, மற்றைய நபர்கள் நீதிபதி தங்கியிருக்கும் வாசஸ்தலத்துக்குச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீதிபதி தங்கியிருக்கும் வாசஸ்தலத்துக்குச் சென்ற இனந்தெரியாதநபர்கள், நீதிமன்றக் காரியாலய அறைகளின் திறப்புக்கோர்வையைத் தரும்படி கேட்டனராம்.

திறப்புக்கோர்வை பொலிஸ் நிலையத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டபோது, அங்கிருந்த தொலைபேசி வயர்களைத் துண்டித்துவிட்டு, திரும்பிவந்து நீதிமன்றக்

(8ம் பக்கம் பார்க்க)

# கல்விமூலவள நிலையத் திறப்புவிழா

[கோப்பாய்]

கோப்பாய் வட்டாரக்கல்வி மூலவளநிலையத்தின் மின் இணைக்கப்பட்ட விரிவுரை மண்டபத்திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினர்களாக தொழிலதிபர் திரு. செ. கந்தசாமித்துரையும் பிரதம கல்விஅதிகாரி திரு. வி. சபாநாயகமும் கலந்துகொள்கின்றனர், சிறப்பு விருந்தினர்களாக திருவாளர்கள் ஆ. மு. ஆலாலசுந்தரம், தி. மாணிக்கவாச

(8ம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரி விடுதியில் கொள்ளை!

[கிளிநொச்சி]

கிளிநொச்சி தர்மபுரம் அரசினர் வைத்திய அதிகாரி விடுதியில் நான்கு இனந்தெரியாத இளைஞர்களினால் துப்பாக்கி முனையில் 53,150 ரூபா பெறுமதியான நகைகளும், பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் நடைபெற்றது.

மேற்படி விடுதியில் வைத்திய அதிகாரி திருமதி மீனாட்சியம்பாள் ஜெயபாலினம், ஒரு மருத்துவ மாது, வீட்டு பணிப்பெண் ஒருவர் ஆகியோர் இரவு நித்திரை செய்துகொண்டிருந்த சமயம் விடுதியில் துப்பாக்கிகள் சகிதம் நுழைந்த நான்கு இளைஞர்கள் வயிற்று வலிக்கு மருந்து தருமாறு வைத்திய அதிகாரியைக் கோரினராம். பின்னர் துப்பாக்கியைக்காட்டி வைத்திய அதிகாரியைப்பயமுறுத்தி நகைகள் இருக்கும் பெட்டியின் திறப்பைப் பெற்று 17 பவுண் நகைகளையும், ஏனைய பொருட்களையும் கொள்ளைத்திடித்து சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக வைத்திய அதிகாரி கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த பஸ்ஸில் 4 பேர் ஆனையிறவு பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நால்வருக்கும் தர்மபுரம் கொள்ளைக்கும் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. கிளிநொச்சிப் பொலிசார் விசாரணைசெய்துவருகின்றனர். (சூ)

### துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான

# மூன்று இளைஞரின் சடலம் 'கொலை' என்று தீர்ப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான மூன்றுகொட்டடி இளைஞர்களின் மரணங்கள், தனித்தனியே கொலைஎனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

யாழ். மேலதிக நீதவான் சீ. பி. எஸ். வரதராசா மூன்று மரணவிசாரணைகளையும் நடத்தினர்,

கொட்டடியைச் சேர்ந்த எஸ். கனகேஸ்வரனின் [24 வயது] மரணவிசாரணையில் அவரது தந்தை என். செல்லத்தம்பி சாட்சியமளிக்கையில் கூறியதாவது; "இறந்தவர் எனது மகன். அவரைப் பீப்பா என்றும் அழைப்பதுண்டு. 5ம் திகதி காலை பெரியகடைக்கு வேலைக்குப் போனர். 3 நாட்கள் வீட்டிற்குத் திரும்பவில்லை மகனைத் தேடினேன். கண்டுபிடிக்க முடியவில்லை. 7ம் தேதி இரவு இரண்டு மூன்று பேரைச் சுட்டுப்போட்டிருப்பதாக ஆட்கள் கூறினர்கள். நான் போய்ப் பார்த்தேன். கண்ணாதிட்டிச் சந்தியில் பெருமாள் கோவில் பக்கமாக பெயர்ப்பலகைக்கு

(8ம் பக்கம் பார்க்க)

# மஹியங்கனை வங்கி ரூ. 8 லட்சம் கொள்ளை

[மஹியங்கனை]

மஹியங்கனை மக்கள் வங்கியில் எட்டு லட்சம் ரூபா கொள்ளை நடந்துள்ளது.

இருவர்வங்கிக்குள் நுழைந்து ஊழியர்களைப் பயமுறுத்தி அவர்களை கட்டிவைத்து விட்டு எட்டு லட்சம் ரூபா பணம், நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்

கொள்ளைக்குப்பின்னர் இவர்கள் வங்கி முகாமையாளரின் காரிலேயே றப்பட்டுச் சென்

(8ம் பக்கம் பார்க்க)

# 'சரத்' இன்று யாழ் வருகிறர்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகர மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவதற்கு கலவான தொகுதி எம்.பி. திரு. சரத் முத்தெட்டுவகம இன்றுயாழ்ப்பாணம் வரவுள்ளார்.

திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கம்யூனிஸ்ட் கட்சி [illegible] பொதுச்செயலாளர் திரு. கே. பி. சில்வா [illegible] த்தவுள்ளார்.

# மின்கம்பத்தில் இளைஞர் சடலம்

(யாழ்ப்பாணம்)

அரியாலையைச் சேர்ந்த கருப்பையா ரஞ்சன் என்ற 20 வயது இளைஞர் நேற்றுக் காலை துப்பாக்கி சூட்டுக்குப் பலியானர்.

இவரது சடலம் புங்கங்குளத்தில் மின்கம்பம் ஒன்றில் கட்டப்பட்டிருந்தது. அருகில் "சமூக விரோத செயல்களில் ஈடுபட்டார்" என்ற துண்டுப் பிரசுரம் காணப்பட்டது.

யாழ். நீதவான் எஸ். [illegible]

(8ம் பக்கம் பார்க்க)

# "சைக்கிளில் வந்த 3 இளைஞர்கள் அண்ணனை அழைத்துச் சென்றனர்!"

## தங்கை சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"இரண்டு சைக்கிளில் 3பேர் வீட்டுக்கு வந்தார்கள். 'அரசன் எங்கே?' என்று என்னிடம் கேட்டார்கள். பக்கத்துக் கருச்சில் வேலைசெய்துகொண்டிருக்கிறர் என்றேன். அவர்கள் அரசனைக் கூட்டி வரும்படி சொன்னர்கள். நான் கூட்டிக் கொண்டுவந்தேன். அவர்கள் அண்ணனைக் கூட்டிச்சென்றார்கள்."

யாழ் கொட்டடியைச் சேர்ந்த அருளானந்தம் பிரேமாநந்த மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது சகோதரி அருளானந்தம் ஹேமலதா மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். மேலதிகநீதவான் கே.

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசீ ளம்பரம்

## விற்பனைக்கு

கிளிநொச்சி கண்டிவீதியிலிருந்து வில்சன் வீதியில் 1ம் கட்டையருகில் வீடுகட்டுதற்குகந்த 1 ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல: 714, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (714)

பதிவு செய்யப்படாத Honda C 90, C 70, MB 90 மோட்டார்சைக்கிள்களும் 86ம் தொடரிலக்க Honda Cd 125 மோட்டார்சைக்கிளும் விற்பனைக்குண்டு. சதாஸ் மோட்டோர்ஸ் அன் ஹாட்வெயர்ஸ் 56/2 ஸ்ரான்லிவீதி (இலங்கை வங்கி அருகாமையில்) யாழ்ப்பாணம். முகவரியில்பார்வையிடலாம். 820

8 ஸ்ரீ மொறிஸ் ஒக்ஸ்போட் (Morris Oxford) விற்பனைக்குண்டு தொடர்பு 147 (185) நாவலர் றோட், யாழ்ப்பாணம். 773

நல்ல நிலையிலுள்ள ''பஜாஜ் செட்டாக்'' ஸ்கூட்டர் 83ஸ்ரீ 2324 உடன் விற்பனைக்குண்டு எந்நேரமும் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளவும் சி. எஸ். கே. மில்ஸ், பெரிய கடை, யாழ்ப்பாணம். 828

உடுப்பிட்டி சந்தைவீதியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு ஆர். ஆர். தர்மறட்ணம், சட்டத்தரணி உடுப்பிட்டி. 832

## தேவை

மெசின் மயின்டர், கொம்போசிற்றர், பையின்டர் உடன் நேரில்வரவும். சித்திரா 310 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். 813

## சோதிடம்

நான் வெளிநாடு செல்ல இருப்பதால் என்னிடத்தில் எழுதத்தந்த சாதகங்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். பண்டிதர் நவரத்தினம் 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 802

## WANTED

A reputed establishment in Stanley Road, Jaffna requires the service of a male and a female Stock Clerk with experience in stock maintainence and ledger work for immediate engagement. Salary negotiable. Closing date 20-7-84. Advt. No. 815, C/o Eelanadu, Jaffna. 815

**ST. HENRY'S DAY**

The above day will be celeberated at St. Hentry's Ilavalai on the 14th of July. Holy Mass. at 9a.m followed by class Soci-als. All Old Boys and Girls are welcome.

812 RECTOR

## காணி விற்பனை

நீர்வேலி காமாச்சியம்மாள் சங்கத்திற்கருகாமையில் உள்ள வீதியில் இருந்து 150 யார் உள்ளிற்குள் 60 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் விலாசம்

சி. சிவநேசன்
சட்டத்தரணி
புத்தூர்
817

## ஷப்ரு அறிவித்தல்

**13-7-84-ந் திகதி வெள்ளிக்கிழமை மட்டும்**

எமது ஸ்தாபனம் காரியாலய திருத்தவேலைகளின் காரணமாக திறக்கப்படமாட்டாதென்பதை இத்தால் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**ஷப்ரு** 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## இன்று மூன்றுண்டு நினைவஞ்சலி



**அமரர் சி. இராசா**
தெல்லிப்பழை
**தோற்றம் 14-4-1923**
**மறைவு: 17-6-1981**

எமது அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைப் பிரிந்து மூன்றுண்டு நிறை வெய்துகின்றது. உங்கள்பிரிவால்கண்ணீர்க் கடலில் தத்தளிக்கும் நாங்கள் உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


மனைவி, மக்கள், மருமகன், பேரர்.
816

## 1வது ஆண்டு நினைவஞ்சலி

**செல்வன் சித்திரவடிவேல்**
**(சித்திரன்) நீர்வேலி**
**மறைவு நாள்: 12-7-1983**



பாசமலராய் மலர்ந்து, அறிவால் எங்கும் மணம் வீசி, அன்பால், பண்பால், உயரிய நற்குணத்தால் உலகில் எல்லோர் உள்ளத்திலும் உறைந்து திடீரென உதிர்ந்த மலராகிவிட்ட எமது அன்புச் செல்வமே! எங்கள் எல்லோருக்கும் ஒளிவீசுவாய் என்று எதிர்பார்த்திருந்தோம். எம் எல்லோர் உள்ளத்திலும் நீங்காத இருளை ஏற்றிவிட்டு எங்கு நீர் சென்றீரோ? மகிழம்பூ உதிர்ந்து சருகாகிய பின்பும் மணம் மாறாததுபோல் நீங்களும் எங்கள் நெஞ்சங்களில் அழியா அன்பு மணம் வீசி வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். உமது பொன் முகத்தை, அன்பு வார்த்தையை இனி எங்கே காண்போமென ஏங்கி உனது பொற்பாதங்களில் முதலாவது ஆண்டு நிறைவுறும் இத்தினத்தில் கண்ணீர் மலர்களால் ஆராதனைசெய்கின்றோம். நீங்கா நினைவால் வாடும்: அப்பா, அம்மா, சகோதரிகள், உற்றார், உறவினர். நீர்வேலி வடக்கு, 12-7-84. 826



# இன்று

# மங்களகரமான திறப்பு விழா

யாழ் நகரின்

## சீமாட்டி ஜவுளி சமுத்திர கிளை நிறுவனம்

**சுன்னகம் நவீன சந்தையிலுள்ள 8-ம் இலக்கக் கட்டிடத்தில்**

## சீமாட்டி ஜவுளி சமுத்திரம்

**இன்று (12-7-84) வியாழக்கிழமை காலை திறந்துவைக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

புதிய விற்பனை நிலையத்தை

**அளவையூர் அருட்கவி சி. விநாசித்தம்பி**

மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்கள்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

கிளை:

**சீமாட்டி ஜவுளி சமுத்திரம்**
158 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
போன்: 24096

**சீமாட்டி**
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24413

## சீமாட்டி பாம்ஸ்

1 நாள், 15 நாள், 1 மாதக் கோழிக்குஞ்சுகள்

**ஸ்கைலைன் (Skyline) செக்ஸ்ட் (Sexed)** விற்பனைக்குண்டு

**சீமாட்டி பாம்ஸ்,** ஸ்ரேஷன் றோட், மயிலங்காடு, சுன்னகம்.

829

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை பிரிக்க விரும்பும் வெளிநாடுகள்

# பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு உதவிவந்தன!

## அரசு தாமதித்திருந்தால் நாடுமுழுவதும் வன்முறை

### இந்திய அரசு அறிக்கை

(புதுடில்லி)

**இந்தியா துண்டாடப்படுவதை விரும்பும் வெளிநாட்டுச் சக்திகள் பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு உதவிசெய்து வந்துள்ளதை நிரூபிக்கச் சான்றுகள் கிடைத்திருப்பதாகப் பஞ்சாப் பிரச்னை தொடர்பாக இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கத் தாமதித்திருந்தால் நாடு முழுவதிலும் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கியிருக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் பொற்கோவில் தாக்குதல் குறித்து இந்திய அரசாங்கம் நேற்றுமுன்தினம் வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

58 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பஞ்சாப்பில் இடம்பெற்ற சம்பவங்கள் திகதி வாரியாக இடம் பெற்றுள்ளன. பொற்கோவில் அமைப்பைத் தெளிவுபடுத்தும் படங்களும் இந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

சீக்கியர்களின் புனித ஆலயமான பொற்கோவில் நவீன ஆயுதங்களின் தளமாக மாற்றப்பட்டிருந்தது அங்கு நவீன ஆயுதங்களும் தகவல் பரிவர்த்தனை சாதனங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''நாடு முழுவதிலும் கிளர்ச்சி நடத்துவதையே தீவிரவாதிகள் நோக்கமாகக்கொண்டிருந்தனர் என்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

''மதத்தின் போர்வையில் பிரிவினையை விரும்பும் சில சக்திகள் பயங்கரவாதக் கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தன.

''பொற்கோவிலைத் தீவிரவாதிகள் தமது ஆயுதக்குதமாகப் பயன்படுத்திவந்ததை அகாலிதள் அறிந்திருக்கவில்லை என்பது நம்பப்படுவதற்குரியதல்ல.

''அரசின் நடவடிக்கைகள் சீக்கியர்களுக்கு எதிரானதல்ல. பயங்கரவாதத்தை முறியடிக்க அரசு எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் சீக்கியர்கள்மட்டுமன்றி நாட்டின் சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.''

## பிரிட்டிஷ் நாணயத்தின் பெறுமதியில் வீழ்ச்சி!

லண்டன், ஜூலை 11

பிரிட்டன் நாணயத்தின் பெறுமதி திடீரென வீழ்ச்சியடைந்து விட்டது.

பிரிட்டிஷ் துறைமுக ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தே ஸ்ரேலிங் பவுணின் பெறுமதி குறைந்து விட்டது.

இந்தப் பெறுமதி இறக்கத்திற்கு எண்ணெய் விலை அதிகரிக்கும் என்ற அச்சமும் காரணம் என்று கூறப்படுகிறது.

ஸ்திரமான பொருளாதார கொள்கையையுடைய பிரிட்டனில் ஏற்றுமதி இறக்குமதி துறையே நாணய பெறுமதியை நிர்ணயித்து வருகிறது துறைமுக தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பட்டினியை முறியடிக்க புதிய உணவுத் திட்டம்!

### அமெரிக்கா அறிவிப்பு

நியூயோர்க் ஜூலை 11

புதிய ஐந்து அம்ச உணவுத் திட்டம் ஒன்றை அமெரிக்கா அறிவித்துள்ளது.

உலகிலிருந்து பட்டினியையும், போஷாக்கின்மையையும் போக்கும்முகமாகவே இந்தத் திட்டம் நடைமுறைக்கு வர விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு உதவப் புதியதிட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் தெரிவித்தார். அமெரிக்க சமாதான உதவியின்கீழ் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

## பஸ் சேவை சீர்கேடு

(பச்சிலைப்பள்ளி)

யாழ். ஆழியவளை பஸ் சேவை ஒரு வாரங்களுக்கு மேலாக நடத்தப்படாததினால் பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள்.

இதனால் இப் பகுதிப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும், பளை கொடிகாமம் ஆகிய இடங்களில் பஸ்ஸுக்கு காத்து நின்று கஷ்டமடைய வேண்டியதாகவுள்ளது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளின் கவனத்தின் கீழ் இவ்விடயம் கொண்டு வரப்பட்டும் எவ்விதபலனும் கிடைக்கவில்லை என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

## விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் விபரம்

(யாழ்ப்பாணம்)

(நேற்றைய தொடர்ச்சி)

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் விபரம் வருமாறு:-

ஜனாப் எஸ். எல். சேகு இப்ராஹிம், செல்வி வி.சாந்தினி, எஸ். சுதாகரன், செல்வி ரி. தவேந்திரதேவி, திருமதி விஜயலட்சுமி இரகுபதிராஜ், செல்வி சே. யோகேஸ்வரி, பி. கணேசமூர்த்தி, ஏ. இளங்கோ, ஜனாப் பி.எம்.முகமட் பதுர்தீன், ரி. கேசவன், திருமதி வி. பேரின்பநாதன், செல்வி யூ, முகமட்இஸ்மாயில், ஜனாப் எம். ஐ. பாஸில் உர். ரஹ்மான், ஜனாப் ஏ. எல் ஏ. முகமட் யூசுப், என் ஸ்ரீகாந்த சர்மா, பி. தவேந்திரன், செல்வி கலாராணி நமசிவாயம், எஸ். தில்லைநாதன், எஸ். தங்கராஜா, செல்வி வி. பேரம்பலம், செல்வி ஜி. வாமதேவன், செல்வி எம். நாகலிங்கம், செல்வி என். கீதா, செல்வி எம். வசந்தகுமாரி, செல்வி எம். பழனியாண்டி, செல்வி ஜே. வன்னியசிங்கம், செல்வி எஸ். சிவகுருநாதன், எஸ். ரி. அருள்முருகன், ஏ கஜேந்திரன், ஜனாப் எம். எம் முகமட் தையர், ஏ. இராநாயகம், தம்பையா, சிவகுமாரன், என். விநோதராஜா, பி. இளமுருகன், கே. திருரவிச்சந்திரன், என். தர்மராஜா, எஸ். கணேஸ்வரன், எஸ். சஸ்பாநிதி, எஸ். பிரணவசோதி, செல்வி எஸ். சோதிலிங்கம், செல்வி எஸ். சின்னத்தம்பி, செல்வி ஆர். வரதாம்பிகை, ஜனாப் ஈ. பீர். முகமட், எஸ். அந்தோனி கே. கருணைராஜா, வி. புவனேந்திரன், செல்வி டீ. எஸ். இராசையா.

## நல்லூர் கொள்ளை வழக்கு

## விசாரணை நடுவில் 2-ம்,3-ம் எதிரிகள் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கொள்ளை வழக்கில் விசாரணை நடுவில் இரண்டாம், மூன்றும் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர் முதலாம் எதிரிமீதான விசாரணை இம் மாதம் 20ம் தேதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது.

இவ் வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணை செய்யப் பட்டது.

இவ் வழக்கில், நல்லூரைச் சேர்ந்ததொழிலதிபர் என்.காசி விஸ்வநாதனிடம், செக் ஒன்றையும், 8,000 ரூபா பொறுமதியான தங்கச் சங்கிலியையும் கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ்.லோகசுந்தரம், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினமும், 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ராஜா விஸ்வநாதனும் ஆஜரானார்கள். (க)

## சைவ சிறார்களுக்கு துணிவகைகள்

(யாழ்ப்பாணம்)

காலஞ் சென்ற கே. வி சுப்பிரமணியத்தின் (கல்லடிமணியம்) 13வது ஞாபகார்த்தமாக அவரது மருமகன் திரு கே. தங்கராசா திருநெல்வேலி சைவச்சிறார்களுக்கு புதிய துணிவகைகளை வழங்கினார்.


குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL.
CHEAP RATES. CONTACT US RIGHT NOW.

குரேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும். ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD
MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No.: 22207 (C.T.S.)



கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing, P.C ஒருபிரதி ரூபா 6.50,

கொழும்பு ஸ்ருடியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அறவாழ்வை வற்புறுத்துகின்ற விதிகளிலும் விலக்குகளிலும் விலக்குகள் பழமையைக் கண்மூடித் தனமாகத் திவ்வியமாகக் கொள்வதாலும், சகிப்புத் தன்மைக்கு இடமளிக்காது வெறுப்பை வளர்ப்பதாலும் தீமையையே விளைவிக்கின்றன.

—பேட்ரண்ட் ரசல்.

# மணிக்கூட்டு கோபுரத்துக்கு விரைவில் புதிய மணி!

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாக செயற்படாமல் இருக்கும் யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தில் புதிய ஜப்பான் மணிக்கூடு பொருத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ.வீ.கே. சிவஞானம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

''1980ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கழற்றப்பட்ட மணி நகர மண்டபத்திலேயே இன்னும் இருக்கிறது. அதை விற்பதற்கான தீர்மானம் எதுவும் என்னால் எடுக்கப்படவில்லை. அதுபற்றிய எதுவித தீர்மானமும் நிதி ஆலோசனைக் குழுவில் ஆராயப்படவுல்லை.

செயல்படாமலிருக்கும் மணிக்கூட்டை செயல்படுத்த நாம் எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை இதனால் 23.03.84ஆம் திகதிஜப்பானிய உயர் ஸ்தானிகராலயத்திற்கு எழுதிப்பெறப்பட்ட 5 முக்கிய மணிக்கூட்டுஉற்பத்தியாளர்களுக்கு 17.05.84 ஆம் திகதி கடிதம் எழுதியுள்ளேன். அதில் நான் கொடுத்திருக்கும் விஸ்தீரணங்களுக்கமைய மின்னியக்க மணிக்கூடுகளை இலவசமாகவோ அல்லது ஆகக் குறைந்தவிலையிலோவிநியோகிக்க முடியுமா என்று கேட்டு எழுதப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகரமண்டபத்தில் 4வருடங்களாக பாதுகாப்பாக இருந்த மணியை விற்றுத்தான் புதிய மணிக்கூடுகளைக்கொள்வனவு செய்ய வேண் மென்றுதீர்மானம் எடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை. ஏனென்றால் சில சமயங்களில் ஒரு விளம்பர நோக்கத்திற்காக இவ்வுற்பத்தியாளர்கள். இலவசமாகவோ, குறைந்த விலையிலோ விநியோகிக்கலாம். அல்லது முழு விலையையும் செலுத்த நேரிடலாம். விலை தெரிந்த பின்பே நிதி எற்பாடுகளைப் பற்றிச் சிந்திக்கலாம்.''

# நமது நோக்கு

## ஆடம்பரமற்ற வைபவம்

யாழ். பல்கலைக் கழகம் யாழ்ப்பாண மக்களுக்கு வழிகாட்டுகின்றதென்றால் அது புதினமல்ல. அதன் முக்கிய பொறுப்புக்களில் பொதுவாக அமையும் பணிஅது.

ஆடம்பரமற்ற முறையில் பட்டமளிப்பு நடைபெறுவதை மற்றும் நிறுவனங்களும் மக்களும் கவனத்தில் கொள்வது அவசியம்.

தேவாலயங்களும் வித்தியாலயங்களும் நிறைந்த குடாநாடு யாழ்ப்பாணம். திருவிழாவோ வேறெந்த விழாவோ எம்மை ஆடம்பரத்திலும் அவசியமற்ற செலவிலும் வீழ்த்திவிடுவது யாழ்ப்பாண வாழ்வின் பரம்பரை வழக்கம்.

பொட்டின்றி பூவின்றி வாடி வதங்கிய முகத்துடன் காணப்படும் இத்தொன்னகரம் இன்று ஆடம்பர நிகழ்ச்சியை ஒருபோதும் அனுமதிக்காது.

இதனைப் புரிய முடியாத அறிவிலிகள் இதுதான் தருணமென்று வெளியூரிலிருந்துவரும் பெரும் பணத் தொகையை நிர்மூலமாக்கி விடுகின்றனர். சுதந்திர மடைந்த மக்களா நாம்?

எனவே மிக அமைதியாக மிக அவசியமான நோக்கத்தை நிறைவேற்ற நடத்தப்படும் பட்டமளிப்புவிழாவில் பிரதம விருந்தினர் எவரும் அழைக்கப்படவில்லை. சபாஷ்! பல்கலைக்கழக வேந்தர், துணைவேந்தர் ஆகியோரின் சிறப்புரைகள் இல்லை. சபாஷ்! (இரு முறை) இம்முறை எவருக்கும் கௌரவப் பட்டங்கள் வழங்குவதில்லை. சபாஷ்! (மூன்று முறை)

'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணானவன் யாழ்ப்பாணத்தான்' என்ற வசனத்துக்கு உதாரணமாக 531 பட்டதாரிகள் தாமதமின்றித் தொழில் பெறுவதற்காகவே இவ்வைபவம் இவ்வாறு நடைபெறுகிறது.

பாடசாலைப் பரிசளிப்பு விழாபற்றி கருத்துவேற்றுமைகள் எழுந்த காலத்தில் கல்லூரி அதிபர் ஒருவர் சிறந்த சுயசிந்தனையாளர் அது நடைபெறுவதை விரும்பவில்லை. பரிசுக்குரிய மாணவருக்குப் பரிசு வழங்குவதில் தப்பில்லை என்றார். ஆனால் பரிசு பெறாத எத்தனையோபேர் பகிரங்கமாக அவமானப்படுத்தப்படலாமா?

இல்லையென்று நாம் ஒத்துக்கொண்டபோது நகைச்சுவை நிரம்ப அவர் சொன்னது: ''மிக இரகசியமாகப் பரிசு பெறுபவர்களை ஒரு இடத்துக்கு அழைத்து இப்புத்தகங்களை இனாமாகத் தருகிறோம் படித்துப்பாருங்கள்'' என்று இந்தத் தவிர்க்கமுடியாத நிகழ்ச்சியை நடத்தவேண்டுமென்றார்.

இன்றைய அமைதியற்ற நிலைமை யென்றகாரணம் மட்டுமல்ல! அனுவசியபேச்சுக்கள், விழாக்கோலம், கௌரவப்பட்டங்கள் எல்லாம் வெறும் ஷோ! தொல்லைகளையும் உற்பத்தி செய்துவிடும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் நிலைநாட்டிய சிறந்த சாதனைகள் நிறைந்தவருடத்தில் ஒருபூரணவிழா நடைபெறுவதில் நியாயமுண்டு.

இந்தக்குழப்பகாலத்தில் இதனை நடத்திமுடிப்பதே மெச்சகத்தக்கது; அதே சமயம் முதன்முறையாக டாக்டர்கள் பட்டம்பெற்று வெளியேறுவதும் ஒரு புதிய சாதனைதான்.

எம்மைப் பொறுத்தளவில் நோய்க்கு வைத்தியம் தேவையென்றாலும் நோயைத்தடுப்பதற்கு புரதசத்துடைய உணவு அதனை உற்பத்திசெய்யும் தொழில் நுட்ப அறிவும்பயிற்சியும் மிகமுக்கியமானவை

'டாக்டர்' வைத்தியம் யாழ்மக்கள் சமுகத்தின் தணித்துவமணநோய். மிதமிஞ்சிய வருவாய், கல்யாணமார்கெட்டின்கிராக்கி போன்ற காரணங்கள் யாழ்ப்பாணத்தில் 'டாக்டருக்கு- மருத்துவபட்டதாரிக்கு முதலிடம் அளித்து வருகின்றது.

போனவழியே போய்க் கொண்டிருக்காமல், காலந்தாழ்த்தாது ஐந்துவருடத்துக்குமுன் தயாரானவிவசாயபீடத்திட்டம், நான்கு வருடத்துக்குமுன் ஆயத்தமான பொறியியல் திட்டம் இரண்டும் கிளிநொச்சியில் உருவாகும் முயற்சிகளை இன்றையவைபவத்தில் நாம் நினைவூட்ட வேண்டிய பொறுப்புடையோம்.

## நல்லூர் ஸ்ரீகைலாச பிள்ளையார் கோவிலில்

# மகாயாகம்

இந்துக்களது சமயச் சடங்குகளில் யாகம் அல்லது ஹோமம் இன்றியமையாத ஒன்று. இது தொன்று தொட்டு வரும்வழக்கமும்பழக்கமும்ஆகுமிந்த யாகம்தனது நன்மைக்காகவும்' உலக நன்மைக்காகவும் செய்யப்படுவது வழக்கம். புத்ரபாக்கியம் சிறந்த புத்ரபாக்கியம் சிறந்த ராஜ்யம், சிறந்த அறிவுபோன்றவற்றைத் தன் ஒருவனுக்காகச் செய்வது ஒருவகை. யாகம். உலக மக்கள் அனைவரும் இன்புற்றிருக்கும் வண்ணம் அந்தக் காலத்தில் ரிஷிகள் செய்த யாகம் இன்று ஓரளவு மறைந்தாலும் இந்தியாவிலும் இலங்கையிலும் சில இடங்களில் சிறிய அளவில்நடைபெறுகின்றன. அந்த வகையில் இலங்கையில் யாழ்ப்பாணமாநகரில் சரித்திரப் பிரசித்தம் வாய்ந்த ஆலயமான நல்லூர் ஸ்ரீகைலாசபிள்ளையார் கோவிலில்சென்ற மூன்று ஆண்டுகளாக நடைபெற்று இந்த ஆண்டு மிகவும் சிறப்பான முறையில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. நேற்று வரும் 11ம்திகதி புதன் கிழமை ஆறுமணிக்கு ஆரம்பித்து இன்று வியாழக் கிழமை மதியம் வரை நடைபெறஉள்ளது' இதில் ஸ்ரீமகா கணபதி ஹோமமும், மகாலஷ்மி ஹோமமும், நவக்ரக ஹோமமும் நடைபெற உள்ளது.

இறைவன் வேதவடிவினன். அந்த வேதங்கள் மந்திரங்களாக ஸ்வர ஒலியுடன் கூடி இறைவனின் திருநாமங்களை ஜபிப்பதாலும் அர்ச்சிப்பதாலும் இறைவனுடைய இறைசக்தி பெருகி உலகிற்கு திருவருள் பாலிக்கும். மந்திரங்களை அர்த்தசுத்தியுடன் ஜபிக்கும் போதும் அர்ச்சிக்கும் போதும் வெறுமனே செய்யாது மலர்களை அர்ஷித்தும் அக்கினிவர்த்தும் அதில் ஹோமத் திரவியங்களைச் சொரிந்தும் ஜபிப்பது அர்ச்சிப்பது பலனைத் தரும் இந்த வகையில்அமைந்ததுமகா கணபதி ஹோமம்ஏனெனில்இறைவன்ஆதியும்அந்தமும்இல்லாதவன் - தெய்வங்கள் எல்லாம் ஒன்று ன நாம்பெயரளவில் கூறினாலும் சிவன் பார்வதி விஷ்ணு. பிரம்மா போன்ற சகல தெய்வங்களாலும் சகல வரங்கள் அளிக்கப்பட்டு எல்லோராலும் முழுமுதற்கடவுளாக போற்றி வணங்கப்படும் பெருமை மஹா கண

(5ம் பக்கம் பார்க்க)

## நவாலியில் நாளை

# அட்டகிரிக் கந்தசுவாமி கோவில் மாகும்பாபிஷேகம்

இயற்கை வளத்தினால் செழிப்புற்று விளங்கும் நவாலியம்பதியில் எழுந்தருளி அருள் சுரக்கும் அட்டகிரிக் கந்தசுவாமி தேவஸ்தானம் சரித்திரப்பெருமை வாய்ந்ததொன்றாகும். இவ்வாலயத்தை ''குருக்கள் கோயில்'' எனவும் கூறுவர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் நவாலியில் வாழ்ந்த சைவப்பெரியார்களுள் இலங்கை நாராயண முதலியார் என்பார் ஒருவர். இவருக்குக் கதிரைமலை என்று தெய்வபக்தி நிறைந்த உத்தம மனைவி இருந்தார். ஒருமுறை முதலியாருடன் மனைவி கதிரைமலையும் கதிர்காமத்துக்குச் சென்றனர். போக்குவரத்துக் கஷ்டங்களைக் கடந்து கந்தனை வந்தனை செய்துமீண்டனர். முருக பக்தி மேலிட அம்மையார் முருகனை அகத்திருத்தினார்.

இதன்பின்பு குன்றுதோறாடும் குமரவேள் ஆதிமூலத்திலுள்ள வேலாயுதத்தில் ஒன்றை வட்டுக்கோட்டை யாத்திரிகர் ஒருவரிடம் கொடுத்து' அதனை நவாலியில் கதிரமலை அம்மையாரிடம் சேர்ப்பிக்கும்படி தலைமைப் பூசகருக்குக் கனவில் தோன்றிக் கட்டளையிட்டருளினார். தன்னலம் கருதி யாத்திரிகர் அந்த வேலினை அம்மையாரிடம் கொடுக்காது தனது வீட்டில்வைத்து வழிபட எண்ண, வீடு தீப்பற்றி எரிய நடுநடுங்கி அவ்வேலினைக் கதிரைமலை அம்மையாரிடம் ஒப்படைத்தார். அம்மையார் குருக்கள் மடத்திலிருந்த சைவக்குருக்களிடம் ஒப்படைத்தார். இதுகாரணமாகவே குருக்கள்கோயில் என்ற

(5ம் பக்கம் பார்க்க)

# நீறுபூத்த நெருப்பு

'வரலாறு மீண்டும் மீண்டும் மறுதலிக்கின்றது' என்றொரு ஆங்கிலவசனமுண்டு.

அதனை ஆராய்ந்தால் அது முற்றும் உண்மையானதல்ல, பண்டைக்காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இன்றும் நடைபெறுவதென்றால் காரணம் ஒன்றுயிருந்தாலும் காலவெள்ளத்தில் வேறுபாடுகள் இருக்கவே செய்யும்.

பசுக்கொலை போன்ற கொடுமைகள் தாங்கமுடியாத கட்டத்தில் பலசான்றோர் யாழ்ப்பாணத்திலிருந்துபாக்குநீரிணையை நீந்தி தமிழகம் சென்றனர். திரும்பவில்லை.

இன்று மனிதகொலை போன்றகொடுமைகள் சிக்கலான நிலையை உருவாக்கி யதால் பலயாழ்ப்பாண...

தமிழர்கள், அரசியல் தலைவர்களும்கூட தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்; இவர்கள் திரும்பிவராமல் இருக்கமாட்டார்கள்; எனவேவரலாற்றில் வேறுபாடுதென்படுகிறது.

அவர்கள் விட்டுப்போன யாழ்ப்பாணத்துக்கு என்னாகிறது? அந்நிய ஆட்சிஇவர்களை விரட்டியடிக்கவில்லை; ஆனால் துன்பம் துன்பமே?

அழகு கெட்டிருக்கும் யாழ்ப்பாணம் அமைதி பெறுவதால் மீண்டும்கம்பீரமாக நடைபோடவல்லது.

இதற்கொருவழி கந்தபுராண கலாசாரத்துக்கு புத்துயிர்கொடுப்பதேஎன்று கருதப்படுகின்றது. இப்பணியில் இன்று நடைபெறும் நூல்வெளியீட்டு விழா நீறுபூத்தநெருப்புக்கு உத்வேகம் அளிக்குமென நம்பலாம்.

## நயினாதீவு

# நாகபூஷணி அம்மை துதி

இராகம்: கமாஸ். தாளம்;ரூபகம்

பல்லவி

அரவ பூஷணி அணி சிரகாலியே அம்பா (அரவ)

அனுபல்லவி

பரவி வானுளோர் தினம் பணியும் சாம்பவி
பங்கய மலர்க் கண்களாலருட் பார்வை நல்குவாய்
அம்பா (அரவ)

சரணம்

பாலமேய கோலநேத்ரி சூலி பார்ப்பதி
ஆலமுண்ட நீலகண்டன் அருகுசேர் கௌரி
சாலு நீலியே தயை தங்கு யாமளாய்
சங்க வெண்குழை துங்க அஞ்செவி தங்கு சங்கரி
அம்பா [அரவ]

நாகுமேய தோகை மஞ்ஞை நாணும் சாயலாய்
வாகைசேர் விசாகன் அன்னை ஆயமாளவி
ஏகநாயகி எழில் நயினை மேவன்னாய்
எங்கள் வெங்கலி சிங்கவந்தருள் இனியரூபியே
அம்பா (அரவ)

வழிசிட்டி பண்டிதர் வே.பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணம்—உற்பத்தி காண்டம்:

# சைவத் தமிழறிஞர்களின் வாழ்த்துரைகள்

கந்தபுராணம்- உற்பத்தி காண்டம் நூல்வெளியீட்டு விழா இன்று இடம்பெறுவதையொட்டி சைவத் தமிழறிஞர்கள் வழங்கிய வாழ்த்துரைகள் வருமாறு:-

ஜெகத் குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள், அம்ருதத்திற்காக பாற்கடலை கடையும் பொழுது அதிலிருந்து கிளம்பியதும் உலகங்களை அழிக்க முற்பட்டதுமான ஹாலஹால விஷத்தை உட்கொண்டு உலகங்களை காப்பாற்றிய பரமேஸ்வரனுக்கும், எல்லோருக்கும் எல்லாவித மங்களங்களையும் அளிக்கும் ஸர்வமங்களையான ஜகன் மாதாவான அம்பிகைக்கும் திம்க்குமாரராக ஆவிர்பவித்து தாரகன் முதலிய அஸுரர்களை ஸம்ஹரித்து தன்னைப் பஜிப்பவர்களுக்கு வேண்டிய பலன்களை அளிக்கும் சக்தி வாய்ந்த ஸ்ரீகந்த பெருமானின் பெருமைகள் அளவில் அடங்கா.

இப்பெருமானின் பெருமைகளை அறிந்துகாஞ்சிபுரம் குமர கோட்டத்தில் பூஜை செய்து வந்த மஹானுகிய ஸ்ரீகச்சியப்ப சிவாச்சாரியார் செந்தமிழில் சொற்சுவை பொருட்சுவையுடன் கந்தபுராணம் என்னும் நூலை இயற்றியுள்ளார். இப்புராணத்திற்கு யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஸ்ரீசுப்பிரமணிய சாஸ்திரிகள் இயற்றிய உரை மிக அழகாக இப்புராணத்தின் பொருளை தெளிவான நடையில் தகுந்த மேற்கோள்களுடன் விளக்குகிறது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்;

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் காலத்திலிருந்து நற்றமிழ் பேசும் யாழ்ப்பாணச் சைவ மக்களுக்கு ஆசிரிய நூலாக விளங்குவது கந்தபுராணம். சைவசமய நூல்களில் பெருமளவு யாழ்ப்பாணச் சைவமக்களுக்கு அறிமுகமான சிறந்த சைவசமய நூல் இஃதே. முக்கியமாக முருகன் தேவாலயங்களில் இன்றும் கந்தபுராண படனம் நடைபெறுவது கண்கூடு.

ஞான நூலாகிய இதனைப் படித்தல், கேட்டல், சிந்தித்தல் ஆனவற்றால் இறைவனடி சேரலாம் என்பதனை அருளாளர்கள் அருளிப் போந்தனர். இப்புண்ணிய கைங்கரியத்துக்கு துணை நிற்குமுகமாக பிரம்மஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் எழுதிய உரையுடன் கந்தபுராணத்தின் ஒரு பகுதியான உற்பத்தி காண்டத்தை திரு மு.கணபதிப்பிள்ளை அவர்கள் வெளியிடுவதறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறோம். அனைத்து சைவமக்கள் இல்லங்கள் தோறும் இருக்க வேண்டிய புனிதமான நூலிது.

எனவே சைவமக்கள் ஆக்கமும் ஊக்கமுமளிக்க வேண்டியது அவர்கள் தம் கடமை முருகப் பெருமான் திருவடிகளைச் சிந்தித்து எமது உளமார்ந்த ஆசிகளை வழங்குகிறோம்.

பேராசிரியர் அ.ச ஞானசம்பந்தன் அவர்கள்;

மனிதனுகப் பிறந்த ஆன்மா வீடுபேற்றை அடையும் வழியைக் கூறுவதே கந்தபுராணம் அற்புதமான செய்யுள்களால் இப் பெரும் காப்பியத்தை புனைந்தார் கச்சியப்பர். ஆனுல் உரை இல்லாமல் இதனை அனைவரும் படித்துப் பயனடைதல் கடினம். எனவே மக்கள் குலம் உய்யவேண்டிப் பரம கருணையால் திரு சாஸ்திரியார் அவர்கள்இனியதமிழ்நடையில்உரை வகுத்துள்ளார். இத்தகைய அரிய பெரிய கருவூலம் எளிதில் யாவருக்கும் கிடைக்கும் வகையில் திரு கணபதிப்பிள்ளை அவர்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இத்தமிழ் உலகம், உரைவகுத்த சாஸ்திரியாருக்கும் இதனை வெளியிட்ட திரு கணபதிப்பிள்ளைக்கும் என்றும் என்றும் கடமைப்பட்டதாகும்.

திருக்கேதீச்சரத் திருப்பணி சபைத் தலைவர் திரு மு. ஞானப்பிரகாசம் அவர்கள்;

கந்தபுராணத்தின் அளக்கலாகாப் பெருமையை ஆதியோடந்தமாக உணர்ந்தவர் எங்கள் நாவலர் பெருமான் அவர்கள்; அதன் ஆசிரியர் சாதாரண மானிடப் புலவரல்லர் என்றும், அவர் பெருங் கருணைப் பிழம்பு வடிவினர் என்றும் எங்கள் நாவலர்பெருந்தகை பற்பல இடங்களில் சாற்றி அருளுகின்றார். யாழ்ப்பாணவரலாற்றையும், யாழ்ப்பாணச் சூழலையும் நன்குதெரிந்திருந்த எங்கள் பெருந்தகை சமான்யராகிய எங்களுக்குக் கந்தபுராணமே மூலநூலாக இருக்கவேண்டும் என்றும் அப் புராண படன நிகழ்ச்சிடே, எங்கள் சமயத்திற்கு சைவ நீதியைத் தெருட்டவல்ல மூல அறம க இருக்கவேண்டுமென்றும் விரும்பினுர், நாங்கள் அவர் வழி வந்த வழித்தோன்றல்கள் எனப்பெருமை கொள்ளவேண்டுமெனில், ஆயிரம் ஆயிரமாய் பல்கியிருக்கும் எங்கள் சைவ ஆலயங்களில் கந்த புராண படன நிகழ்ச்சியை புது உத்வேகத்தோடு மீண்டும் பிரதிஷ்டை செய்தல் வேண்டும். எங்கள் சைவசமயத்துக்கு உயிர்போன்றதாகிய அந்த நிகழ்ச்சியின்றி. கோயில்களும், கோயிற் பூசைகளும் யாதும் பயன்தரமட்டா என்பதே நாவலர் பெருமான் தம்முள்ளத்தில் உணர்ந்த பேருண்மையாகும்.

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த காலஞ்சென்ற தர்மலிங்கம் கைம்பெண் நல்லம்மா என்பவரின் மரண சாதனமில்லாத மரணச் சொத்துக்கள் விடயத்தில்,

- மரணமெய்தியவர்

வழ. இல. தத்துவம் /3772.

தர்மலிங்கம் ஜெயராஜசிங்கம், சென். ஆன் ஒழுங்கை, சுண்டிக்குளி.

- மனுதார்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி இந்நீதிமன்றத்தில்தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி காலை10-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையானது ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதுமிருந்தால் காட்டுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றுர்.

1984ம் ஆண்டு ஆனி மாதம் 12ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. ..லசிங்கம்,
பதிவாளர்

வரைந்தவர்:
க. குணரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி
798

---


**A/L 86**
**சனி, ஞாயிறு வகுப்பு**

பிரிவு II ஆரம்பம்:
**12-7-84**
(வியாழன்)

2-00: பிரயோக கணிதம்
3-30: தூயகணிதம்

TUTOR:
**Ravimohan**
74A, Clock Tower, Road, Jaffna.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(793)


## அட்டகிரி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் வந்ததென்ப.

நாளடைவில் பல பெரியார்களுடைய பெருமுயற்சியினுலும் பல தனவந்தர்களுடைய நன்கொடைகளினுலும் ஆகம முறைப்படி அற்புதமான ஆலயம் எழுப்பப்பட்டு முதலாவது கும்பாபிஷேகம் 1921ம் ஆண்டு நிறைவெய்தியது. அடியார் பக்தி சிறந்து விளங்கவே ஆலயமும் சிறப்புற்றுவளர 1944-ம் ஆண்டு இரண்டாம் முறையாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து முருகப்பெருமான் ஆலயத்தில் பரிவார மூர்த்தங்களுக்கும் ஆலயம் நிறுவப்பெற்று 1967-ம் ஆண்டு கும்பாபிஷேகம்நிறைவேறியது.

தங்கத்தாத்தா என்று அழைக்கப்படும் நவாலி தந்த சோமசுந்தரப்புலவர் அட்டகிரிப் பெருமான்மீது அழகானஅட்டகிரிப்பதிகமும் திருவூஞ்சலும் பாடிச் சிறப்பித்துள்ளார்.

நாளைவெள்ளிக்கிழமைகாலை 9மணி முதல் 10 மணி 30 நிமிஷம் வரையில்வரும் சிம்மலக்கின சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இவ்வாலயப் பிரதம குரு பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் யாழ். நகரிலுள்ள முக்கிய தேவஸ்தான குருக்கள்மார் சகிதம் மகா கும்பாபிஷேகம் நடைபெறும் வாழ்வில் கும்பாபிஷேகம் காண்பது கிடைத்தற்கரியதொரு பாக்கியம் என்பர்.

**ம. சி. சிதம்பரப்பிள்ளை.**

## மகாயாகம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பதிக்குரியது என்பது எல்லோரும் அறிந்தது கணபதியை வழிபட எட்டு, பதினேழு, இருபத்தியொன்று, என்னும் எண்ணிக்கையைக் கொண்ட திரவியங்கள் சிறந்தத. எட்டுத்திரவியங்களால் ஹோமம் செய்வது அஷ்டமூர்த்தி வடிவினன் என்பதையும் பதினேழு திரவியங்களால் ஹோமம் செய்வது 'கணுநந்தவா' என்ற பதினேழு சொற்கள் கொண்ட நாதவடிவினன் என்பதையும் இருபத்தியொரு திரவியங்களால் ஹோமம் செய்வது இருபத்தியொரு தலைமுறைக்கும் சகலசௌபாக்கியங்களையும் பெற்று வாழக் கூடிய நிலையை உண்டாக்குகிறுன் என்பதையும் வேதங்கள் மூலம் அறியலாம். இத்திரவியங்கள் யாவை என்பதையும் எந்த மந்திரத்தைச்சொல்லி ஹோமம் செய்யப்படவேண்டும் என்பதையும் அந்தந்தத் திரவியங்களின் பலன் என்ன என்பதையும் விபரமாக எடுத்துரைத்தால் இக்கட்டுரை விரியும்.

இந்த ஆலயம் கூலங்கைச் சிங்கைராயனுல் உருவாகி அவன் மைந்தனுல் பரிபாலனம் செய்ய பட்டு என்றும் அதன் மகிமையில் குறையுருது விளங்குகிறது. கடந்த மூன்று வருடங்களாக இவ்யாகம் சிறப்பாக நடைபெற்றது. அது போல் இந்த ஆண்டும் மிகச் சிறப்பான முறையில் செய்ய திருவருள் கூடியுள்ளது.

மஹா கணபதி ஹோமம் மட்டுமல்லாது உலகமக்கள் அனைவரும் சகலஐஷ்வர்யங்களும் பெறும்வகையில் மஹாலஷ்மி ஹோமமும் நவக்கிரக தோஷங்களில் இருந்து நிவாரணம் பெற நவக்கிரக ஹோமமும் நடை பெறும்.

இந்த யாகம் உலக மக்கள் க்ஷேமமாக தாழவும் நாட்டு மக்கள் க்ஷேமமாக லஷ்மி கடாட்சமும் நவக்கிரகங்களின் அனுக்கிரகத்துடன் வாழவும் பல நன்மைகளும் சகல சௌபாக்கியம் பெறும்பொருட்டு நடைபெறுகிறது எல்லோரும் இதன் பயன் பெற்று இன்புறுவீர்களாக.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்''

—''அடியான்''

---


வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு
**26%** தொடக்கம் **30%** வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.

குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (1000/-)
எந்நேரமும் அறிவித்தலின் பின் பணத்தைத் திருப்பிப் பெறலாம்.

விபரங்களுக்கு:-
JAFFNA PROPERTY TRADES LTD.,
3, நவீன சந்தை, (மேல் மாடி)
யாழ்ப்பாணம். போன்: 23698



**யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி**

**நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?**

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

**குரூஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

குறிப்பு:
கனடா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

**Cross Travel Services (Pte) Ltd.**
STAGE II, MODEL MARKET
No. 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.

Phone No: 22040, 22065. TELEX No. 22907 (C.T.S) CE


★ இன்று தேர்உற்சவம்

## கந்தவனம் என்று சொன்னுல் நொந்தமனம் துள்ளுமடா!

ராகம்: அடாணு தாளம்: ஆதி

பல்லவி

கந்தவனம் என்று சொன்னுல் நொந்தமனம்
துள்ளுமடா
இந்தவனம் கண்டதுமே இன்பநிலை
கொள்ளுமடா (கந்தவனம்)

அ. பல்லவி

வெந்தமனம் ஆறுதற்கு கந்தனிடம்
சென்றிடுவோம்
வந்தனைகள் செய்திடுவோம் வந்தபிணி
கொன்றிடுவோம் (கந்தவனம்)

சரணம்

வேல்பற்றி வருபவனின் கால்பற்றிப்
பிடித்திடுவோம்
வினைபற்றித் தொடர்ந்தாலே புகழ்பற்றிப்
படித்திடுவோம்
நீள்நெற்றி நீறுகொள்ளும் அவன்பெற்றி
ஏடுசொல்லும்
நிறைவெற்றி வாழ்விலுற தலம்சுற்றி
வந்திடுவோம் (கந்தவனம்)

அல்வாயூர்ச் செல்லையா விவேகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம் ஆனி
திகதி 28 (12-07-1984)
வாரம் வியாழன்
தி தி சதுர்த்தசி காலை 7-57ன் மேல் பூரணை
நட்சத்திரம் மூலம் காலை 6-33ன் மேல் பூராடம்.

மேடம்; மனதில் அமைதி குன்றும்' எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலை தூக்கும். அமைதி நன்று.

இடபம்; தனத்துடன் வாழ்வு இன்று தவறாது கிடைக்கும். நீண்டநாள்கடன் இன்று நிவர்த்தியாகும் வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

மிதுனம்: எதிர்பார'த முனையிலிருந்து ஆபத்து உருவாகும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும். தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

கடகம்; தேனை' சம்பவங்கள் இடம்பெறும். தேடியது கிடைக்கும், காதலர்கள் வாழ்க்கையில் நிம்மதியான தினம்.

சிங்கம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்யவிரும்புவீர்கள். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம். கலைஞர்களுக்கு நல்ல தினம்.

கன்னி: பொதுப் பணியில் ஈடுபடவிரும்புவீர்கள். அரசியல்வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கும். சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரை மேற்கொள்வதற்கும் இடமுண்டு.

துலாம்- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். அதிக வருவாய்க்கு இடமுண்டு.

விருச்சிகம்: பொருள் ஈட்டு' தில் புதிய பாதையை வகுத்துக் கொள்வீர்கள். கஷ்டங்கள் சில நிவர்த்தியாகும்' வீட்டில் சுபகருமம் நடைபெறுவதற்கும் இடமுண்டு.

தனுசு: இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும். தொழில் புரியுமிடத்தில் பாராட்டப்படுவீர்கள். உறசாகமூட்டும் கடிதம் ஒன்றும் கிடைக்கலாம்.

மகரம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். பெரியோர் பகைத்துக்கொள்ளாமல் பொறுமையுடன் நடந்துகொள்ளவும்.

கும்பம்: வாகன சுகத்துடன் இல்லத்தில் திருப்தி நிலவும். முதியவர் ஆசியுண்டு. தாய்வழித்தனமும் சேரும். முன்னேற்றமான வாழ்வு கிட்டும்.

மீனம்; கண்துடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடமுண்டு. குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும். உடல் நலமும் சிறிது பாதிக்கப்படும் உணவுவிடயத்தில் கவனம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## சாட்சி கடத்தப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு சாட்சியமளிப்பதற்காக தனியார்பஸ்ஸில் மனைவியுடன் சென்று கொண்டிருந்த இளைஞரை நான்குஇளைஞர்கள் கடத்தி சென்றுவிட்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இக் கடத்தலின் போது சந்திவெளியைச் சேர்ந்த சபாநாயகம்(30வயது) என்பரே கடத்தப்பட்டார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 'பிக்புளுமாபிள்' (ஆங்கிலம்)
5-55 'ஹியர்ஸ்பூமர்' (ஆங்கிலம்)
6-20 சிங்களநிகழ்ச்சி.
6-45 பௌத்தமதபேச்சு (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இசைநிகழ்ச்சி (சிங்களம்)
7-45 விவரணச் சித்திரம் (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 சிங்கள நிகழ்ச்கி.
9-00 பௌத்தமத நிகழ்ச்சி
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'வின்ட்ஸ்ஒவ்வோர்' (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்.
10-35 'வின்ட்ஸ் ஒவ்வொர்' தொடர்ச்சி
10 45 பௌத்தமதப் பேச்சு (ஆங்கிலம்)
11-10 நிகழ்ச்சிகள் முடிவு'

## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல்கள் சேலம் ஜெயலக்ஷ்மி
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமியநற் சிந்தனை
6-10 பௌத்த நற்சிந்தனை
6-15 நன்னெறி
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புக்கள்
6-50 மெல்லிசைப் பாடல்கள்
7-00 இசையமுதம்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 வாத்திய விருந்து
7-45 திருப்புகழ் என்.சண்முகரத்தினம்
8-15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8.45 பௌத்தவாசகம்
9-00 நாதவினோதம்
9-15. திருவூஞ்சல்- நயினை நாகபூஷணி அம்மன்
9-45 தம்ம உரையாடல்
10-00 கவியரங்கு இனி என்ன துன்பம்எமக்கு சொக்கன்
10-30 வில்லுப்பாட்டு ''கை கொடுத்த கண்ணன்'' நாச்சிமார் கோவிலடி ராஜன் வில்லிசைக் குழுவினர்
11-00 இசைக்கச்சேரி M. L. வசந்தகுமாரி.
11-58 பகல் ஒலிபரப்பு முடிவு.

## குரு பூர்ணமா தினம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் குருபூர்ணமா தினம் இன்று வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி திருவடி அபிஷேகம், ஹோமம் இடம்பெறுவதுடன் ஓதுவார் மூர்த்தி வி.ரி.வி சுப்பிரமணிய தமிழ் வேதம் ஓதுவார். திருமதி. மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் 'குருவாய் வருவாய்' என்னும் பொருள் பற்றி சிறப்புரையாற்றுவார்.

## கோஷ்டி மோதலில் காயம்

(பச்சிலைப்பள்ளி)

இயக்கச்சி புல்லாவெளி புனித செபஸ்தியன் ஆலய உற்சவத்தின் போது இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலின் போது ஒருவர் கத்துக் குத்துக்கு இலக்காகி அபாயகரமான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டார். மேலும் இருவர் இம் மோதலின் போது படுகாயமடைந்தார்கள் குழந்தைகள் உட்பட பலர் சன நெருசலுக்குள் அகப்பட்டு சிறு காயமடைந்தார்கள்.

இம் மோதலின் போது போத்தல்கள், பொல்லுகள் என்பனவும் பயன்பட்டதாகத் தெரியவருசிறது.

## யாருடையது?

திரு மு சோ. சிவஞானிசிங்கம் என்பவருடைய சாரதி லைசென்ஸ்சை திரு எஸ். புண்ணியமூர்த்தி என்பரும், ஏழாலை வடக்கைச் சேர்நத திரு. கனகரத்தினம் கோபால பிள்ளை என்பரின் அடையாள அட்டையை திரு.எஸ். ஜெயக்குமார் என்பவரும், கரவெட்டி செங்குந்தா வீதி திரு. சிதம்பரபிள்ளை ஞான சுப்பிரமணியம் என்பவருடைய அடையாள அட்டையை திரு.அன்ரன் என்பரும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (கி)


இல்லத்தரசிகளே!
இன்னும் நீங்கள் பாவிக்கத் தொடங்கவில்லையா?







றஜசோயா

இன்னும் நீங்கள் பாவிக்கத் தொடங்கவில்லையா ?
முழுக்குடும்பத்துக் குமான புரதச்சத்து நிறைந்த உணவு,
றஜசோயா வாழ்க்கைச் செலவு மின்னல் வேகத்தில்
உயர்ந்து கொண்டுப் போகும் இவ்வேளையில்
வீட்டுச் செலவை குறைக்க உதவுகின்றது.
றஜசோயா பலகாரங்கள் தயாரிப்பதற்கும்,
ரொட்டி அப்பம், இடியப்பும்,
பிட்டு முதலியன தயாரிப்பதற்கும் இன்றியமையாதது.
றஜசோயா புரதச் சத்து நிறைந்தது.
போஷாக்கு அடங்கியது.
காலஸ்ட்ரோல் எனும் கொழுப்புச்சத்து
அறவே இல்லாதது.
றஜசோயா மக்களின் அபிமானம் பெற்ற உணவு.
இன்றே உங்கள் சில்லறை வியாபாரியிடம் ஒரு பக்கட்
வாங்கிக் கொள்ளுங்கள்.
முதன் முறையாக.
நவீனமயமான தொழிற்சாலையில் சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பட்டது.

றஜறட்ட ஃபுட் கிறெயின்
புறேசெசிங் கம்பனி லிமிட்டெட்
29, பிறே புறாக் வீதி, கொழும்பு - 2.
தொலைபேசி: 27961-7
றஜசோயா எனக் கேட்டு வாங்குங்கள்.
தரங்குறைந்த போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
முத்துராமன்-ஜெயந்தி
**ஷண்முகப்பிரியா**
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Kabir Bedii in
GIRL FROM INDIA
action-adults-color
new print-with
four Hindi hit songs

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-00, 4-30
7-00

13-7-84 முதல் நீங்கள்
ஆவலுடன் எதிர்பார்த்த
I THE JURY

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ஊர்வசி சாரதாவின்
நடிப்பில்
**துலாபாரம்**
(புதிய பிரதி)
தன் குடும்பத்தில் ஏற்பட்ட சோகத்தால் குழந்தைகளுக்கு நஞ்சூட்டி தானும் நஞ்சருந்தும் பரிதாபமான முடிவு ஏன்?. எதற்கு?

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் - ஜெயசித்திரா
அசோகன்-V. S.ராகவன்
**பணக்காரப் பெண்**
(புதிய பிரதி)
வருகிறது
LADY CHATTERLEY'S
LOVER

**றீகல்** (யாழ். நகர்)
7th to 13 th
10-30, 2-15, 4-30, 6-30
Roger Moore as
James Bond 007
in
''MOON RAKER''
Action-packed
Bond Adventure
நுட்பமானஅதிநவீனரக
ஆயுதங்களுடன்
ஜேம்ஸ் பொண்ட்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
**பொம்மலாட்டம்**
Coming soon
BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30,
கமலஹாசன்-ஸ்ரீபிரியா
**சட்டம் என் கையில்**
(கலர்-புதிய பிரதி)

**போயாதினத்தை**
**யொட்டி இன்று**
**சினிமாக் காட்சிகள்**
**இல்லை**

## இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி

## ஆண்டு விழாவும் வரவேற்பும்

யாழ். நகரமண்டபத்தில்
வியாழன் 12-7-84 பி. ப. 3 மணி
தலைவர்: பொன்குமாரசாமி

பேச்சாளர்கள்:

**கே. பி. சில்வா**
பொதுச் செயலாளர்
**சரத்முத்தெட்டுவெகம**
கலவான பா. உ.

குறித்தநேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும். 827

எண்ணற்ற ரசிகர்களை தன்னகத்தே
வைத்திருக்கும்

## வீடியோ பிரசாத்தின் இன்றைய வெளியீடு

நடிகர் திலகம் சிவாஜிகணேசனின்

## 'வாழ்க்கை'

(PYRAMID ORICINAL)

இன்றே நீங்களும் அங்கத்தவர்களாகி
படங்களைப் பார்த்து மகிழுங்கள்

## வீடியோ பிரசாத்

(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)
49, முனீஸ்வரன் வீதி, – யாழ்ப்பாணம்.
834

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற ஈடு 4942 இலக்க வழக்கில் வாதி தெல்லிப்பழை கிழக்கு செல்வி அன்ரன்ற் பிரேமகுமாரி இராசதுரைக்குப் போகவேண்டிய தீர்வைத் தொகை 10,000/- ரூபாவும் மேலும் இதில் 5.000/- ரூபாவுக்கு 14-10.82 தொடக்கம் 26-10-83 வரை வருடமொன்றுக்கு 30% வீத வட்டியும், அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும், வழக்குச்செலவு 4684/-ரூபாவும் விற்பனவு சலார்களும், இத்தொகையைப் பிரதிவாதிகளாகிய மயிலிட்டி வடக்கு கந்தப்பிள்ளை திருநாவுக்கரசு விடமும் பெண் பரமேஸ்வரியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின் படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1984 ஆு ஓகஸ்ற் மீ 22 (2-8-1984) காலை பத்துமணி தொடக்கம் முறையே அவ்வவ் வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### குறித்த ஆதனங்கள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற் பற்று மாவிட்டபுரமிறைகட்டையிட்டி நில. பர 24. எல்லை கிழக்கு வயிரவப்பிள்ளை சின்னப்பிள்ளைக்கும், சுப்பர் சிதம்பரப்பிள்ளைக்குமுரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை. மேற்கு ஆறுப்பிள்ளை சின்னத்துரைக்கும் மறு பங்காளருக்குமுரிய ஆதனமும் கிணறும் தெற்கு சிதம்பரப்பிள்ளை சுவாமிநாதருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் நில'பர 7 குளி 3ம் அதற்குரியவைகளும்.

2. மேற்படி இறை கடவத்தையும் கட்டையிட்டியும் நடுவிற்சீமாவும் நில. பர 1 குளி 16. எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் சின்னச்சிப்பிள்ளையினுதனமும், செல்லையா பெண் பொன்னுப்பிள்ளையினுதனமும். வடக்குக் கந்தையா பெண் தங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் மேற்கு மூத்ததம்பி கந்தப்புவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் தெற்கு வேணுப்பிள்ளை பெண் சிதம்பரத்தியினுதனம் இதடங்கலும்.

3. மேற்படி இறை கடவத்தையும் கட்டையிட்டியும் நடுவிற்சீமாவும் நில. பர 2½. ஆனால் உறுதிப்படி நில. பர 2. குளி 2 செய்பயிர் வான்பயிர்களும் வீடும் எல்லை கிழக்கு செல்லத்துரை இராசரத்தினத்தினுதனம் வடக்கு உறுதிவாங்கற்காரரினுதனம். மேற்கு ஆறுப்பிள்ளை கதிரிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு செல்லத்துரை இராசரத்தினத்தினுதனம். இதடங்கிலும். தென்மேற்கு மூலையிலுள்ள கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலும் இராசரத்தினத்தின் கிழக்கெல்லைக் காணியின் வடக்கருகாலும் கிழக்கெல்லையருகாலும் பாதையுரித்தும்.

**வி.செ.குட்டிப்பிள்ளை**
விற்பனை ஆணையாளர்

643, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம். 818

## பியோன் தேவை

யாழ்ப்பாணம் பட்டின எல்லைக்குள் அமைந்த
கொம்பனிக்கு பியோன்மார் தேவை.

25 வயதுக்குட்பட்டோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 389
C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். (389)

## பிஸ்கால் விற்பனவு

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
குமாரவேலு சபாநாயகம்:
புலோலி, கிழக்கு.
வழக்காளி

வழ இல: 16405.
எதிராக

வேலுப்பிள்ளை மகள் செல்வரத்தினம்
வத்திராயன், செம்பியன்பற்று.
எதிராளி

மேலே சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1982ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16ந் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் மேற்சொல்லப்பட்ட எதிராளி வழக்காளிக்கு,

ரூபா 13680/-ம், மேலும் முதல் ரூபாய் 12000/-க்கு வழக்குத் தாக்கல் செய்த திகதியாகிய 6-8-1982ல் இருந்து தீர்வைத் திகதியான 16-9-1982 வரை 24% வட்டியும், தீர்வைத் திகதியான 16-9-1972 இல் இருந்து முழுவதும் இறுக்கும் வரை 9% வட்டியும். கோட்டுச் செலவும்,

இன்று வரை கட்டத் தவறிப் போனதால் எதிராளியுடைய கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1984ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20ம் திகதி காலை 10-30 மணிக்கு குறித்த ஆதனத்தில் இருந்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப்பள்ளி பகுதி செம்பியன் பற்று கோவிற்பற்று வத்திராயன் இறை ''ஒச்சித் தோட்டத்திற் தலைமடை வயல்'' நெ. பர 54. இதில் கிழக்குப்பக்கமாக நெ.பர 34. இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்குரியவாதனமும், வேறு ஆதனமும், வடக்கு வேலுப்பிள்ளை மகன் செல்வரத்தினம். (மேற்படி வழக்கின் எதிரிக்குரியவாதனம்) மேற்கு வேலுப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்கும், வேறு ஆதனமும், தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்ட வெள்ளவாய்க்கால் நிலம் நீக்கி முழுவதும், (முற்பதிவு பி/52/181)

மாவட்ட நீதிமன்று,

**றி.ஜெயராசசிங்கம்**
பிஸ்கால்

பருத்தித்துறை.
09-07-1984
830

## கருப்பவதிகளே!

உங்கள் கருவிலுள்ள சிசு ஆணா பெண்ணா என அறியவும், உங்கள் வயிற்றில் அடைசல், முட்டு, இருமல், சோம்பல், களைப்பு, மல சலக் கோளாறு யாதேனும் காணப்படுமாயின் எமது தயாரிப்பான ''குங்குமப்பூச் சூறணம்'' கையால் பிடித்தாற் போலக் குணப்படுத்தும். ஆரோக்கியமும் பக்ஷியுமான மகவையும், எதுவித கரைச்சலுமில்லாத இயற்கைப் பிரசவத்தையும் தரும். பாக்கியசாலிப் பெண்களுக்கே இது கிட்டும்.

பிள்ளை பெற்றதன்மேல் தேகப் பொருமல், வெள்ளைபடுதல், தண்ணீர்த் தாகம், நாரிக் கொதி, தீட்டுக் கோளாறு, கை கால் விறைப்பு முதலிய கோளாறுகள் காணப்பட்டால் எமது தயாரிப்பாகிய ''காமகோட்டச் சூறணம்'' சொன்னபடி குணப்படுத்தும். பூரண திருப்தி பெறுவீர்கள். இவை இற்றைக்குப் பதினெரு பரம்பரையாக அனுபவமான மருந்து என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இதுவுமில்லாமல் உங்கள் தேகத்தில் எந்தப் பாகத்திலும் சரி, எவ்வளவு காலத்திற்கு முன் ஏற்பட்டதாயினும்சரி, உங்களை வருத்தப்படுத்திக் கொண்டிருக்கும் ''பழைய நோ''க்களை அற்புதமான முறைகொண்டு உத்தரவாதத்துடன் நேர்மையான முறையில் வைத்தியம்செய்து மாற்றிக் கொள்ள விரும்புவோரும் தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்:

டாக்டர் க. இராமசுவாமி,
ஆடியபாதவீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

819

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி முனையில்

# இயக்கத்தின் பெயரால் கடத்தப்பட்ட மினிபஸ்!

## குடும்பக் கஷ்டம் தாங்க முடியாத உரிமையாளர்கண்ணீர்விட்டுஅழுகிறர்!!

(யாழ்ப்பாணம்)

இயக்கத்தின் பெயரைச் சொல்லி. மினிபஸ்ஸின் சாரதியான உரிமையாளரைத் துப்பாக்கி முனையில் பணயக் கைதியாகத் தடுத்து வைத்துக் கொண்டு, ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான அந்த மினி பஸ்ஸைக் கடத்திச் சென்றவர்கள் நான்கு நாட்களாகியும் உரிமையாளரிடம் ஒப்படைக்கவில்லை எனப்புகார் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் தெய்வேந்திரம் (48 வயது) என்பவருக்குச் சொந்தமான 30 ஸ்ரீ 5790 (இஸாஸு) மினி பஸ்ஸே கடத்திச் செல்லப் பட்டதாகும்.

க ந்த 7-ம் திகதி இரவு இச் சம்பவம் நடைபெற்றது

சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே போக்குவரத்துச் சேவையிலீடுபடும் மினிபஸ்ஸை சம்பவதினமிரவு 8-45க்கு சேவை முடிந்து மட்டுவில் தெற்கிலுள்ள தமது வீட்டுக்கு கொண்டுசெல்லும்பொழுது சாவகச்சேரி பஸ்நிலையத்தில் பஸ்ஸுக்குள் இனந்தெரியாத மூவர் ஏறிக்கொண்டார்களாம். அப்பொழுது கண்டக்டராக வேலை செய்யும் க. கோணேஸ்வரன் என்பவரும் இருந்தாராம்.

மினிபஸ்ஸுக்குள் ஏறியிருந்த அந்த மூவரும் கிளிநொச்சிக்கு வாடகைக்குவிடுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க தாம் பஸ்ஸைச் செலுத்திச் சென்றதாகவும், இரணைமடுச் சந்தியை மினிபஸ் அண்மித்ததும் அங்கு நின்று கொண்டிருந்த மேலும் இரு நபர்களை அவர்கள் கூப்பிட்டு அப்பஸ்ஸில் ஏற்றிக்கொண்டதாகவும் இரணைமடுக்குளத்தை நெருங்கியதும் மினி பஸ்ஸை நிறுத்தச் சொல்லி துப்பாக்கி முனையில் தங்கள் இருவரையும் இறக்கிவிட்டு பின்னர் ஏறிய இருவரும் துப்பாக்கி முனையில் தடுத்து வைத்திருக்க ஏற்கனவே ஏறிய மூவரும் மினி பஸ்ஸை எடுத்துச்சென்று விட்டதாகவும் பொலிசாருக்கு தெரிவித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

தடுத்து வைத்திருந்த இரு நபர்களும் மினிபஸ் உரிமையாளரிடம் இருந்த 200 ரூபாவையும் அபகரித்துக்கொண்டு அதில் 20 ரூபாவை திருப்பிக் கொடுத்தனராம். பதினொரு மணி வரையும் அந்தஇடத்தை விட்டு நகரக் கூடாதென்று எச்சரிக்கை செய்து கொண்டிருந்த நபர்களும் பின்னர் சென்று விட்டனராம்.

தமது குடும்பக் கஷ்ட நிலையைக் கண்ணீருடன் கதையாக அந்தக் கடத்தல்காரரிடம் எடுத்துச்சொன்ன பொழுது தங்கள் தேவை முடிந்ததும் திருப்பித்தருவதாக சொன்னார்களாம். இதுவரை அந்த மினி பஸ் தம்மிடம் கிடைக்கவில்லை என்று உரிமையாளர் நேற்று ஈழநாடு காரியாலயத்தில் கவலையுடன் சொன்னார் (மா)

## ‘மோட்டார் சைக்கிளில் வந்து சொன்னார்கள்’

### தந்தை சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

''5-ம் திகதி வேலைக்குச் சென்றவர் வேலை முடிந்து வரவில்லை இரண்டு மூன்று நாட்கள் வேலை இருந்தால் தங்கி வருவார். அதனால் இரண்டு நாட்கள் தேடிப்பார்க்கவில்லை. மூன்றும்நாள் தேடினேன் கண்டுபிடிக்கமுடியவில்லை.''

யாழ். கொட்டடியைச் சேர்ந்த அருளானந்தம் யூசனின் (19 வயது) மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரின் தந்தை விசுவலிங்கம் அருளானந்தம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மேலதிக நீதவான் கே.பி.எஸ். வரதராசா மரண விசாரணை நடத்தினார்.

அருளானந்தம்மேலும்கூறியதாவது: ''இறந்தவர் என் மகன். தூலன் என்றும்அழைப்பதுண்டு. பெயின்ற் அடிக்கும் வேலை செய்கிறார். யாரும் கூப்பிட்டால் வேலைக்குச் செல்வார் 5ம் திகதி 9 மணிக்கு வேலைக்குச் சென்றார் வேலை முடிந்து வரவில்லை 7ம் தேதி இரவு 9 மணிக்குஇருவர் மோட்டார் சைக்கிளில் வந்து ‘ஆட்களைச் சுட்டுப் போட்டுக்கிடக்கு’ என்று சொன்னார்கள். நான் சென்று பார்த்தேன் தட்டாதெரு சந்திக்குச் சென்றேன் சந்தியில் என் மகன் யூசன் தலையில் காயத்துடன் இறந்து கிடந்தார்''

### யாருடையது?

ஐந்து திறப்புகள் கொண்ட ஒரு திறப்புக் கோர்வையை திரு.சி.சத்தியபாலன் என்பவரும் தொல்புரத்தைச் சேர்ந்த திரு.மகாதேவன் தவத்துரையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை திரு. வ.பரமாணந்தம் என்பவரும் கண்டுஎடுத்துஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### மல்லாகம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காரியாலய அறைகளை உடைத்து கொள்ளையடித்துச்சென்றனராம்.

கொள்ளையடிக்கப்பட்ட இரும்புப்பெட்டியுள் இருந்த நகைகள், ரொக்கப்பணம் ஆகியவை குறித்து கணக்கெடுப்பு பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை தெரிவிக்கப்படவில்லை.

கையடையாள நிபுணர்கள் நேற்று சம்பந்தப்பட்ட அறைகளுள் நுணுக்கமாக ஆராய்ந்தபோதும் எதுவித அடையாளங்களும் தெளிவாகக் காணப்படவில்லை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சுன்னாகம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்கின்றனர்,

கொள்ளைச்சம்பவம் இடம்பெறபோதிலும் நீதிமன்றம் நேற்று நடைபெற்றது.

இந்த நீதிமன்றத்தில் துப்பாக்கிக்கொள்ளை, கைதிகள் கடத்தப்பட்டது, இம்மாதம் 5ம் திகதி தீ வைப்புச்சம்பவம், கடைசியாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் ஆகியன இங்கு நடைபெற்றது தெரிந்ததே. [மா]

### மூன்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அருகில், தலையில் காயத்துடன் இறந்துகிடந்தார். என் மகன் என்று அடையாளம் காட்டினேன். எவ்வாறு இறந்தாரென்றோ, எவ்வாறு காயம் ஏற்பட்டதென்றோ, தெரியாது. இன்னும் அவருக்கு திருமணமாகவில்லை.

நாகலிங்கம் குணராசவும் சாட்சியமளித்தபின் கொலையென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

### மஹியங்கனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றனர் என்றும் வழியில் காரை அனுதரவாக விட்டு மோட்டார் சைக்கிள் ஒன்றைக்கடத்தி தப்பிச்சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### சைக்கிளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி.எஸ்.வரதராஜா மரணவிசாரணை நடத்தினர். அருளானந்தம் ஹேமலதா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ‘இறந்தவர் என் அண்ணன். அரசன் என்றும் அழைப்பதுண்டு. 5-ம் திகதி காலை 10-45 மணிக்கு நான் வீட்டிற்கு வரும்போது, 3 பேர் எனது வீட்டு கேற்றுக்கு முன்னால் இரண்டு சைக்கிளில் நின்றார்கள். என்னைக்கண்டதும் அரசன் எங்கே என்று கேட்டார்கள் பக்கத்து கறுச்சில்வேலைசெய்துகொண்டிருப்பதாக கூறினேன். அவரைக் கூட்டி வரும்படி சொன்னார்கள். நான் கூட்டிக்கொண்டு வந்தேன் அவர்கள் என் அண்ணனிடம ‘அரை மணித்தியாலத்தில் திரும்பி வரலாம் சைக்கிளில் ஏறும்’ என்று கூறிக்கூட்டிக்கொண்டு சென்றார்கள். அதன்பின் அண்ணன் திரும்பி வரவில்லை. நாங்கள் விசாரித்துப் பார்த்தோம். கண்டுபிடிக்க முடியவில்லை, 7ம் திகதி தந்தை வந்து அண்ணன் இறந்து கிடப்பதாகக் கூறினர்''

### கல்விமூலவள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கர், ஆர். பாலசுப்பிரமணியம், சதா லோகேஸ்வரன், கு. கிட்ணர், வி. எஸ் சுவாமிநாதன், எஸ். ஆர். சண்முகரத்தினம், க. சின்னத்துரை, த.இர சேந்திரம் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

கோப்பாய் கல்வி மூலவள நிலையத்திற்கு நிரந்தந் வைப்புப் பணமாக ரூபா இருபத்தையாயிரத்தை திரு.செ.கந்தசாமித்துரையும், மின் இணைப்பை திரு. க. தர்மலிங்கமும் உருக்குஅலுமாரியை திரு.எம். நாகரத்தினமும், கூரை மின் விசிறிகளை புத்தூர் மேற்கைச் சேர்ந்தவர்த்தகர்கள்சின்னையா வேலுப்பிள்ளையும், இளைய தம்பி வேலுப்பிள்ளையும், கட்டிட வர்ணத்தை புத்தூர் மேற்கைச் சேர்ந்த வர்த்தகர் ச. கனகலிங்கமும், தம்பாலையைச் சேர்ந்த செல்வன் ந. விக்கினேஸ்வரனும், ஒலிப்பதிவு கருவியை புத்தூர் மேற்கு இ. குணசிங்கமும், உபசார உதவியைபுத்தூர் மேற்கு நிற்சிங்கம் தம்பிராசாவும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். அழைப்பிதழ்களைபூபாலசிங்கம் புத்தகசாலை அன்பளிப்பாக அச்சிட்டுள்ளது. இவ்விழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் கோப்பாய் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் ஒழுங்கு செய்துள்ளார்.

### கற்பகவிநாயகர் தீர்த்தோற்சவம்

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் ஓடயம்பதி கற்பகவிநாயகர் ஆலய தீர்த்தோற்சவம் இன்று காலை நடைபெறுகிறது. பிற்பகல் கொடி இறக்கும் வைபவம் நிகழும்.

### இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

சுண்டிக்குளிமகளிர் கல்லூரியில் இன்று லியோகழகம்ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

இலங்கையில் ஒரு பெண்கள் கல்லூரியில் லியோ கழகம் ஒன்று ஆரம்பிக்கப்படுவது இதுவே முதல் தடவை. யாழ் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் இவ் லியோக் கழகம் ஆரம்பிக்கப்படுகிறது.

### மின்கம்பத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா, ஸ்தலத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டு மரண விசாரணை ஆரம்பித்தார் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். (க)

### சர்வகட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. அமைச்சரவை தீர்மானங்களை ராஜாங்கஅமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி. அல்விஸ் நிருபர்களுக்கு விளக்கிக் கூறுகையில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜூலைக் கலவரத்தின் ஓராண்டு நிறைவையொட்டி நாட்டில் ஏதாவது குழப்பங்கள் ஏற்படுமா? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ''இத்தகைய நினைவு தினங்கள், சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற முக்கிய தினங்களில் பயங்கரவாதிகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தமுனைவது வழமையான ஒருநிகழ்ச்சியாகும். குறிப்பாக ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்தின்போது ‘அவ்ரோ விமானம்’ குண்டுவைக்கப்பட்டது என்று குறிப்பிட்ட அமைச்சர் இதனால் எந்தநிலையையும் சமாளிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாடு விரைவில் கூடுமென்றும் சிலவேளைகளில் அடுத்த வாரம் அளவிலும் கூடும் சாத்தியக்கூறுகள் இருக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார். [சூ]


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் ஸ்ரீராகவன்

காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஸ்ரீராகவன் (இளைப்பாறிய தபாலதிபரும் தற்போது Radio officer ரும்) 8-7-84-ல் டுபாயில் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. வே. சுப்பிரமணியம் J.P. (இளைப்பாறிய ஆசிரியர் காரைநகர் இந்துக் கல்லூரி) காலஞ்சென்ற இலஷ்மி அம்மா சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மகனும் தொல்புரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு V.சபாபதி காலஞ்சென்ற திருமதி இராஜேஸ்வரி சபாபதி ஆகியோரின் அன்பு மருமகனும், கமலா (இளைப்பாறிய Telephonist) தொலைபேசிப் பரிவர்த்தன நிலையம், கொழும்பு) வின் அருமைக் கணவரும், ஸ்ரீபதியின் அன்புத் தந்தையும், திருமதி இந்திராணி செல்வரத்தினம், காலஞ்சென்ற திரு. சிவானந்தன் [ஆசிரியர் ஒஸ்மானியாக் கல்லூரி, யாழ்ப்பாணம்) திருமதி பரஞ்சோதி அம்மா மகேசன் [ஆசிரியை, இந்துஆரம்பபாடசாலை,யாழ்ப்பாணம்], திருமதி சிவசோதிஅம்மா முருகேசு, திருமதி ஞானசோதி அம்மா இராஜேஸ்வரன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் திரு ஈஸ்வரசரன் சபாபதி (லண்டன்) திருமதி இந்திரா இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

784/1, பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி,
யாழ்ப்பாணம் 836

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கந்தையா பத்தர்

காலஞ்சென்ற கந்தையா பத்தரின் மனைவி திருமதி சரஸ்வதி காலமாகிவிட்டார். இவர் ராசு, துரை, பாலு' (சவூதி அரேபியா) பாலசரஸ்வதி, பாலபரமேஸ்வரி, ராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோரஞ்சிதமலர், வரதராசாவின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பி. ப. 4-00 மணியளவில் உரும்பராய் வேம்மன் மயானத்தில் நடைபெறும்.

இதை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். 853

## மரண அறிவித்தல்

### சண்முகம் செல்லத்துரை

[களவாவோடை அம்மனின் தந்தை]

ஏழாலை தெற்கு சண்முகம் செல்லத்துரை காலமானார். இவர் சுந்தரத்தின் அன்புக் கணவரும், நல்லையா சுப்பிரமணியம், காலஞ்சென்ற தங்கம்மா, சித்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மயில்வாகனம், மகேந்திரன், இராஜகுமார், யோகராணி, யோகேஸ்வரி, செல்வராணி [சித்திவிநாயகர், மெடிக்கல் கிளினிக் புன்னாலைக்கட்டுவன்], இந்திராணி, இந்திராதேவி, வசந்தகுமாரி [அம்மன்], விஜயகுமாரி ஆகியோரின் அருமைத் தந்தையும், இராசதுரை, காலஞ்சென்ற சிவலிங்கம், குணரத்தினம், பாலசிங்கம் கணபதிப்பிள்ளை, கனகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 12-7-84 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 852


இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org